# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 24 வெள்ளிக்கிழமை 10.10.2025 திர் 335







# என்.பி.பி. அரசாங்கத்தின் அமைச்சரவையில் மாற்றம்







கொழும்பு, ஒக். 10

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சரவையில் இன்று முதல் முறையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2026 வரவு - செலவுத் திட்டத்துடன் இணைந்ததாக அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளைத் துரிதமாகவும் செயற்றிறனுடனும் முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மூன்று அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் பத்து பிரதி அமைச்சர்கள் இன்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தனர்.

அதன்படி, இன்று பதவியேற்ற புதிய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளனர்.

7

## கண்டியில் மாயமான இரண்டு சிறுவர்களும் சடலங்களாக மீட்பு!



கண்டி, ஒக். 10

கண்டி, தென்னகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் காணாமல்போயிருந்த நிலையில் அவர்கள் இருவரின் சடலங்கள் இன்று வெள்ளிக்கிழமை மகாவலி கங்கையில் மிதந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன என்று கண்டி பொலி ஸார் தெரிவித்தனர்.

தரம் 8 மற்றும் தரம் 9 இல் கல்வி

7

## தமிழரசுக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்றத்தில் முறியடிப்பு!



கொழும்பு, ஒக். 10

இன மற்றும் மதப் பெயர்கள், அடையாளங்களைக் கொண்ட கட்சிகளைத் தடை செய்யுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கொண்டு வரவிருந்த தனிநபர் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் பெரும் வாதத்தைத் ஏற்படுத்தியது.

அந்த முயற்சி தங்களின் கடும் எதிர்ப்பால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

7

## யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமைகளைப் பொறுப்பேற்ற பாலித செனவிரட்ன



யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பாலித செனவிரட்ன கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பி.எம்.சி.ஜே. பி. பளிகேன இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

இந்நிலையில்,

7

## நீச்சல் தடாகத்தில் மூழ்கி முன்பள்ளி சிறுவன் சாவு!

### உப அதிபர் உட்பட 7 பேர் கைது



கொழும்பு, ஒக். 10

நுகேகொடை பகுதியில் உள்ள விடுதியொன்றில் உள்ள நீச்சல் தடாகத்தில் மூழ்கி 5 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம்

7



## மவுஸ்சாக்கலை நீர்த் தேக்கத்தில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

மஸ்கெலியா, ஒக். 10

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள மஸ்கெலியா மவுஸ்சாக்கலை நீர்த்தேக்கத்தில் இருந்து 32 வயதுடைய பி.வை.எம்.சி. லக்ஸ்மன் என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட நபர் திருமணமான ஒரு குழந்தையின் தந்தை எனவும் மஸ்கெலியா நோட்டன் வீதி புரவுன்லோ வட்டாரத்தில் வசிப்பவர் எனவும் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

சடலம் ஹட்டன் நீதி மன்ற நீதிவான் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி வந்து பார்வையிட்ட பின்னர் சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு சட்ட வைத்திய அதிகாரி முன் நிலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தண்ணீர் போத்தலை அதிக விலைக்கு விற்ற கடைக்கு 6,00,000 அபராதம்

கொழும்பு, ஒக் .10

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு குடிநீர் போத்தல் ஒன்றை விற்பனை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட கொலன்னாவ பிரதேசத்தில் உள்ள ஒரு வர்த்தக நிலையத்திற்கு, கொழும்பு நீதவான் நீதிமன்றம் 6,00,000 ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் நாரஹேன்பிட்ட மாவட்ட அலுவலகத்தால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

500 மில்லிலீற்றர் குடிநீர் போத்தலின் கட்டுப்பாட்டு விலை 70/- ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த வர்த்தக நிலையம் அதனை 90%- ரூபாவிற்கு விற்பனை செய்ததாக குற்றம்சாட்டி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குற்றம் சாட்டப்பட்ட வர்த்தக நிலையம் நீதிமன்றத்தின் முன் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டது.

தண்டனை வழங்குவதற்கு முன்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் விசாரணை அதிகாரிகள், இந்த குற்றத்திற்காக ஐந்து இலட்சம் முதல் ஐம்பது இலட்சம் ரூபா வரை அபராதம் விதிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை கருத்திற்கொண்ட நீதவான், குறித்த வர்த்தக நிறுவனத்திற்கு 6,00,000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

(ஐ)

# விஜேராம வீட்டால் மகிந்த செலுத்தப்போகும் இலட்சக்கணக்கான பணம்

கொழும்பு, ஒக் .10

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வசித்து வந்த கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள, உத்தியோகபூர்வ இல்லத்தின் மின்சாரம் மற்றும் நீர் கட்டண நிலுவை தொகை காரணமாக அவற்றினை துண்டிக்க அதிகாரிகள் சென்றதாக தெரிய வந்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் நீர் இணைப்பை துண்டிக்க அங்கு சென்றிருந்ததாகவும் ஒரு இலட்சம் ரூபாய் நிலுவைத் தொகை காரணமாக மின்சார வாரியமும் மின்சார இணைப்பை துண்டிக்க அங்கு சென்றிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பணியாளர்கள் மட்டுமே அங்கு இருந்ததால், மின்சாரம் மற்றும் நீர் இணைப்பை துண்டிக்காமல் அதிகாரிகள் திரும்பி வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து விசாரித்த போது, அந்த வீட்டிற்கு 6 இலட்சம் ரூபாய் நிலுவைத் தொகை இருப்பதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரிவித்துள்ளார். (ஐ)

# மாணவர்கள் தலைக்கவசம் அணிந்து கொள்வது தொடர்பான அறிவுறுத்தல்!

*கொழும்பு, ஒக் .10*

*கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைக்கு செல்லும் மாணவ மாணவிகள் தங்களது பாதுகாப்பு கருதி கட்டாயமாக பாதுகாப்பு தலைகவசம் அணிந்து செல்லுமாறு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி அறிவித்துள்ளார்.*

*கல்முனை வலயக் கல்வி பணிப்பாளருக்கு இவ்விடயம் தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.*

*பாடசாலைக்கு செல்லும் மாணவ மாணவிகள் தங்களது பாதுகாப்பு கருதியும் மற்றும் வீதி போக்குவரத்து சட்டங்களை அறிவுறுத்தல் செய்யுமாறும் வேண்டிக்கொள்வதோடு இவ் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.*

*அத்துடன் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை மாணவ மாணவிகளை பாடசாலை ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரு ஒழுங்குபடுத்தல் செய்து வீதி போக்குவரத்து காப்பாளர்களை நியமிக்குமாறும் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*எனினும் வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் ஒரு சிலர் பாடசாலை வருகின்ற போது தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.*

*(ஐ)*



# உயர் பதவிகள் பற்றிய தவறான தகவல்களைப் பரப்பியவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை



கொழும்பு, ஒக் .10

உயர் பதவிகள் பற்றிய நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்துரையாடப்படாத விடயம் தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடகங்களுக்குத் தவறான கருத்தை வெளியிட்டதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். குறித்த விடயம் தொடர்பில் அவர்கள் மீது அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உயர் பதவிகள் பற்றிய நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்துரையாடப்படும் விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்க, எவருக்கும் உரிமை இல்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொது மக்கள் பாதுகாப்புச் செயலாளர் ஏற்கனவே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்த நிலையில் தவறான செய்தியைப் பரப்பியவர்கள் மற்றும் செய்திகளை வழங்கியவர்கள் மீது சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்று அமைச்சர் விஜித ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் இந்தியாவின் தேவைக்காக நடத்தப்பட்டதாகவும், அதன் பின்னணியில் செயற்பட்டது இந்தியா என செயலாளர் ரவி செனவிரத்ன குழுவில் ஒருபோதும் கூறவில்லை எனவும் அமைச்சர் விஜித ஹேரத் இதன்போது கூறினார்.

இது தமது அரசாங்கத்தால் கட்டமைக்கப்பட்ட இராஜதந்திர உறவுகளைச் சீர்குலைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் தவறான பிரசாரம் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## தண்டனை பெற வேண்டிய ஒருவருக்கு பதவி உயர்வு வழங்கிய அநுர உதய கம்மன்பில சாடல்



கொழும்பு, ஒக் .10

இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காகவே தான் அதனை விமர்சிப்பதாக பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் எவ்வித சோதனைகளும் இன்றி துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் அளித்துள்ள முறைப்பாடு குறித்த விசாரணைக்கு இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகியிருந்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

வரலாற்றில் முதன் முறையாக எவ்வித சோதனைகளும் இன்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காகவே நாம் தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைக்கின்றோம்.

ரங்க திஸாநாயக்கவின் பொய் நாடகங்களை நிறுத்துவதற்காகவே நாம் இந்த நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

ஜனவரி மாதம் இடம்பெற்ற இந்த கொள்கலன் விடுவிப்பு மோசடி தொடர்பில் ஒன்பது மாதங்கள் கடந்தேனும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

கொள்கலன் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராக செயற்பட்ட சுங்க திணைக்களத்தின் பேச்சாளர் சீவலி அருங்கொட, அவற்றில் போதைப்பொருட்கள், ஆயுதங்கள், தரம் குறைந்த மருந்துகள் இல்லை எனத் தெரிவித்திருந்தார்.

அவர் இவ்வாறான கருத்தை தெரிவித்த அந்த சந்தர்ப்பத்தில் கூட பெக்கோ சமனுடைய போதைப்பொருள் தயாரிப்பு மூலப்பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்துள்ளன.

இது தொடர்பில் ஆராய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளர், பிரதி திறைசேரி செயலாளர் உள்ளிட்டோரடங்கிய விசாரணைக்குழுவினால் நியாயமான அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் 28ஆவது பக்கத்தில் துறைமுகத்தில் நிலவிய நெரிசலுக்கான தீர்வாகவே குறித்த கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாக, விசாரணைகளின் போது தம்மால் இனங்காணப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறெனில் அந்த காரணம் பொய்யானது என அந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

27ஆவது பக்கத்தில் சோதனைகள் இன்றி கொள்கலன்களை விடுவித்து பொறுப்பிலிருந்து விலகுவதற்கு பணிப்பாளர் நாயகத்துக்கு சட்டத்தில் அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீவலி அருங்கொடவுக்கு தண்டனை வழங்குவதற்கு பதிலாக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வு வழங்கியுள்ளார்.

ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்கள் கூட இல்லாத நிலையில், அவரை விட சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் இருந்த போதிலும், தண்டனை பெற வேண்டிய ஒருவருக்கு பதவி உயர்வு வழங்கியதன் மூலம் அரசாங்கம் மக்களுக்கு என்ன கூற முற்படுகிறது? நாம் ஊழல், மோசடியாளர்களை பாதுகாப்பதோடு எமக்கு வேண்டியவற்றை செய்வோம் என்பதே அரசாங்கத்தின் செய்தியாகும் என்றார். (ஐ)

## ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட தயார் – சஜித் தெரிவிப்பு!

கொழும்பு, ஒக் .10

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், ஒரு கூட்டு அரசியல் திட்டத்தை தொடங்குவதற்கான பொறிமுறையை ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

இந்த தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்துள்ளார்.

அதன்படி, நாட்டின் மற்றும் மக்களின் பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியமான, ஜனநாயக மற்றும் முற்போக்கான தீர்வுகளை வழங்குவதே இந்த முயற்சியின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகிய இரண்டும் பொதுக் கொள்கை கட்டமைப்பின் கீழ் இணைந்து பணியாற்றக் கூட்டு உடன்பாட்டை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த கூட்டிணைவில், இரு கட்சிகளும் தமது தனித்துவமான அடையாளங்களைப் பேணிக்காக்கும் என்றும் அவர் உறுதிப்படுத்தினார்.

இதனிடையே, சஜித் பிரேமதாச தொடர்ந்து



எதிர்க்கட்சித் தலைவராக நீடிப்பார் என்றும், தலைமைப் பதவி குறித்து எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார் தெரிவித்துள்ளார்.

இந்த ஒருங்கிணைந்த அரசியல் பயணத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் அடிமட்ட உறுப்பினர்கள் தமது ஆசிகளையும், ஆதரவையும் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தமிழருக்குத் துரோகம் இழைக்கமாட்டோம்!

### தேசிய மக்கள் சக்தி உறுதிமொழி

*கொழும்பு, ஒக். 10*

*“தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் நிச்சயம் மாற்றம் வரும் என்று தமிழ் மக்கள் உறுதியாக நம்புகின்றனர். அந்த நம்பிக்கைக்கு ஒருபோதும் துரோகம் இழைக்கமாட்டோம்.” – என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அவர் மேலும் உரையாற்றுகையில்,*

*“இந்த நாட்டில் கடந்த 76 வருடகால அரசியலானது மேட்டுக்குடிகள், தனவந்தர்களுக்கு மட்டுமே சொந்தமான அரசியலாக இருந்துவந்தது. இவர்களின் தாளத்துக்கேற்பவே அரசியல்வாதிகள் ஆட்டம்போட்டனர், ஆட்டுவிக்கப்பட்டனர். இந்நிலைமையை நாம் மாற்றியமைத்துள்ளோம். மேட்டுக்குடிகள் மற்றும் உயர் வர்க்கம் வசமிருந்த அரசியல் சாதாரண மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.*

*எனவே, மக்களை மதிக்கின்ற, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற, உறுதிமொழிகளுக்கு செயல் வடிவம் கொடுக்கின்ற அரசாங்கமாகவே தேசிய மக்கள் சக்தி திகழ்கின்றது. ஆகவே, இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு மக்கள் முன்வரமாட்டார்கள். மாறாக அரசாங்கத்தின் பின்னால் அணிதிரண்டு அதன் பயணத்தை வலுப்படுத்தி வருகின்றனர்.*

*இற்றைக்கு ஒரு வருடத்தக்கு முன்னர் இந்த நாடு எந்நிலையில் இருந்தது. பல சவால்களுக்கு மத்தியில் நாட்டை மீட்டுள்ளோம். பொருளாதாரத்தை வளப்படுத்தி வருகின்றோம். வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் சுதந்திரமாக நாடு திரும்புவதற்குரிய சூழ்நிலை நிலவுகின்றது.*

*இனவாத மற்றும் மதவாத அரசியலுக்கும் முடிவுகட்டப்பட்டுள்ளது. எனவே, கடந்த ஒரு வருடத்தில் நாம் கடந்து வந்த பாதை மகிழ்ச்சியளிக்கின்றது.*

*யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*

*சர்வதேச விளையாட்டு மைதானம்கூட நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பட்டுள்ளது. அங்குள்ள மக்களின் வாழ்க்கை மேம்பட்டு வருகின்றது.” – என்றார்.*



# கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழப்பு: விஜய் பிரசாரத்துக்கு 60 டிரோன்கள் கொண்டு வரப்பட்டது ஏன்?

## ஜனநாயகன் படத்துக்கான ஷூட்டிங்காக நடத்தப்பட்டதா என மாவட்ட செயலாளர் மதியழகனிடம் கிடுக்கிப்பிடி விசாரணை

கரூரில் விஜய் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் இறந்த சம்பவம் தொடர்பாக தவெக மாவட்ட செயலாளர் மதியழகனை சிறப்பு புலனாய்வு குழுவினர் கஸ்டடி எடுத்து விசாரித்து வருகின்றனர்.

அதில் விஜய் பிரசாரத்துக்கு 60க்கும் மேற்பட்ட டிரோன்களை கொண்டு வந்தது ஏன் என்பது பற்றி கேள்வி எழுப்பி விசாரித்தனர். ஜனநாயகன் படத்துக்கான ஷூட்டிங்காக இந்த வீடியோக்கல் பயன்படுத்தப்பட்டதா என்றும் விசாரணை நடத்தினர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த 27ம் தேதி தவெக தலைவர் விஜய் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதுதொடர்பாக தவெக பொது செயலாளர் புஸ்ஸி ஆனந்த், துணை பொது செயலாளர் நிர்மல்குமார், கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் உள்ளிட்டோர் மீது 5 பிரிவுகளின் கீழ் கரூர் டவுன் போலீசார் வழக்கு பதிந்தனர். இதில் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்ட மதியழகன், இவருக்கு அடைக்கலம் தந்த கரூர் மாநகர பொறுப்பாளர் பவுன்ராஜ் ஆகியோர் கடந்த மாதம் 29ம் தேதி கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதற்கிடையே சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு, கரூரில் கடந்த 5ம் தேதி முதல் முகாமிட்டு விசாரணை நடத்தி வருகிறது. இதனிடையே ஜாமீன் கேட்டு பவுன்ராஜ் தரப்பில் தாக்கல் செய்த மனு, கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆனது. இந்நிலையில் கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகனை 5 நாள் காவலில் எடுத்து விசாரணை நடத்த அனுமதி கோரி சிறப்பு புலனாய்வு குழுவினர் கரூர் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனு தொடர்பான விசாரணை கரூர் மாவட்ட தலைமை

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1ல் நீதிபதி பரத்குமார் முன்னிலையில் நேற்று நடந்தது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, மதியழகனை 2 நாள் விசாரணை நடத்த அனுமதி அளித்து உத்தரவிட்டார். இதையடுத்து மதியழகனை சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணைக்காக மாலை 6 மணிக்கு அரசு சுற்றுலா மாளிகைக்கு அழைத்து சென்றனர்.

அங்கு வைத்து மதியழகனிடம் சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணை நடத்தினர். அப்போது பிரசாரத்திற்கு 60க்கும் மேற்பட்ட டிரோன்கள் எதற்காக கொண்டு வரப்பட்டது, பாதுகாப்புக்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டது போன்ற பல்வேறு கேள்விகளை புலனாய்வு குழுவினர் கேட்டனர். மேலும் ஜனநாயகன் படத்தில் கரூர் காட்சிகளை இடம்பெறச் செய்வதற்காக இந்த வீடியோக்கள் எடுக்கப்பட்டதா? என்பது குறித்தும் அதிகாரிகள் அவரிடம் விசாரணை நடத்தினர். ஆனால் அவரோ, ட்ரோன்கள் எடுத்தது எல்லாம் தலைமைக் கழகம்தான். எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இந்த கிடுக்கிப்பிடி விசாரணை நள்ளிரவு 11 மணிவரை நீடித்தது. தொடர்ந்து அங்கேயே தங்க வைக்கப்பட்டிருந்த மதியழகனிடம் 2வது நாளாக இன்று காலை முதல் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதியழகனை வேலுசாமிபுரத்துக்கு அழைத்து சென்று விசாரிக்கவும் சிறப்பு புலனாய்வு குழு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. மதியழகனின் 2 நாள் கஸ்டடி நாளையுடன் (11ம் தேதி) முடிவடைவதால் அவரை புலனாய்வு குழுவினர் நாளை பிற்பகல் 3.30 மணியளவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர்.

மதியழகனுக்கு ஜாமீன் வழங்க கோரி தவெக வழக்கறிஞர்கள், நேற்று காலை கரூர் அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவின் மீதான விசாரணை வரும் 13ம் தேதி நடைபெற உள்ளது.

இந்நிலையில் ஆம்புலன்ஸ் டிரைவர் தாக்கப்பட்ட வழக்கில் சேலம் கிழக்கு மாவட்ட தவெக செயலாளர் வெங்கடேசனை (30) நேற்று மதியம் சேலத்தில் தனிப்படை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவரை கரூருக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி, கரூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

அவரை வரும் 23ம் தேதி வரை காவலில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து வெங்கடேசன் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இந்த வழக்கில் சேலத்தை சேர்ந்த கார் டிரைவர் மணிகண்டன் நேற்று முன்தினம் கரூர் நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவரை நீதிமன்றம் ஜாமீனில் விடுவித்தது.

சிறப்பு புலனாய்வு குழுவினர் நேற்று முதல் 3 குழுக்களாக பிரிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஒரு குழு, அரசு சுற்றுலா மாளிகையில் மதியழகனிடம் விசாரணை நடத்தி வருகிறது.

இதுதவிர அரசு சுற்றுலா மாளிகைக்கு அருகே உள்ள பொதுப்பணித்துறை திட்ட அலுவலக கட்டிடம், புகழூரில் உள்ள டிஎன்பிஎல் வளாகம் ஆகிய இடங்களிலும் சிறப்பு புலனாய்வு குழுவினர் முகாமிட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த 3 இடங்களிலும் இன்றும் விசாரணை நடந்து வருகிறது. (ஐ)

# எத்தனை அடிமைகள் வந்தாலும் பாஜ கால் வைக்க முடியாது கை நம்மை விட்டு போகாது: துணை முதல்வர் உதயநிதி


எத்தனை அடிமைகளை ஒன்றாக சேர்த்து வந்தாலும் பாசிச பாஜ, தமிழ்நாட்டில் காலடி வைக்க முடியாது. கை நம்மை விட்டு போகாது. என வேடசந்தூர் விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் வீரா.சாமிநாதன் இல்ல திருமண விழா நேற்று நடைபெற்றது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி பேசியதாவது: இந்தியாவில் அதிக பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. அடிமைகளும், பாசிஸ்ட்டுகளும், சங்கிகளும், 'இந்த அரசுக்கு தொல்லை கொடுக்க வேண்டும். எப்படியாவது தமிழ்நாட்டை அபகரிக்க வேண்டும். கைப்பற்ற வேண்டும்' என்று பல்வேறு திட்டங்களை தீட்டுகின்றனர். ஒன்றிய பாசிச பாஜவுக்கு ஏற்கனவே எடப்பாடி பழனிசாமி என்ற அடிமை சிக்கி உள்ளார். இன்று அந்த அடிமை பத்தவில்லை என்று புது அடிமை கிடைக்குமா என பார்த்து கொண்டு இருக்கின்றனர்.

புது அடிமைகள் நிச்சயமாக கிடைப்பார்கள். ஆனால் எத்தனை அடிமைகளை ஒன்றாக சேர்த்து வந்தாலும், கடைசி திமுக தொண்டர் இருக்கும் வரை பாசிச பாஜ தமிழ்நாட்டில் காலடி வைக்க முடியாது. கடைசி தொண்டர் கூட உங்களை ஓட, ஓட விரட்டுவார். ஏற்கனவே ஜெயலலிதாவை மறந்த எடப்பாடி தற்போது எம்ஜிஆரையும் மறந்து விட்டார். எடப்பாடிக்கு அமித்ஷா முகம் மட்டுமே நினைவில் இருக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் 2 நாள் சுற்றுப்பயணமாக அரசு மற்றும் கட்சி நிகழ்ச்சிகளை முடித்து திருச்சி மாவட்டம் செல்கிறேன். இந்த 2 நாட்களில் எங்கு சென்றாலும் அன்புடன், எழுச்சியுடன் வரவேற்பு உள்ளது. இந்த திருமண விழா அரங்கிற்கு வாகனத்தில் இருந்து வரும் போது கூட அதே அன்பு, எழுச்சி இருந்தது எனக்கு உற்சாகத்தை தந்தது. கை நம்மை விட்டு போகாது. நான் என்னுடைய கையை கூறினேன். உங்கள் மேல் உள்ள நம்பிக்கையை கூறினேன். இவ்வாறு பேசினார்.

துணை முதல்வருடன் செல்பி எடுத்து உற்சாகம்

திண்டுக்கல்லில் நேற்று காலை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நடைப்பயிற்சி மேற்கொண்டார். பழநி ரோடு வழியாக சென்றவர் தாடிக்கொம்பு சாலை, ஆர்.எம்.காலனி, நேருஜி நகர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 30 நிமிடம் நடைபயிற்சி மேற்கொண்டார். அப்போது அந்த வழியாக வந்த பொதுமக்கள், இளைஞர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், துப்புரவு தொழிலாளர்கள் துணை முதல்வருடன் கைகுலுக்கி செல்பி எடுத்து மகிழ்ந்தனர். அப்போது, துணை முதல்வர் பெண்களிடம் ஹமகளிர் உரிமை தொகை ஆயிரம் ரூபாய் மாதந்தோறும் வருகிறதா' என்று கேட்டறிந்தார்.





# தொடுதல்!

'மனிதன் உலகின் ஆகப் பெரிய சல்லிப் பயல்' என்கிற புதிய சொலவடை உண்டு. பல சமயங்களிலும் அது உண்மைதானோ என்று தோன்றுவதுண்டு. ஒருவர் மேல் உண்டாகும் அன்போ, பாசமோ அதீதமாகும்பொழுது, அதன் வெளிப்பாடு தொடுதலாகத்தான் இருக்கிறது. அதை வெறும் காமத்துடன் சுருக்கிப் பார்க்கப் பழகிக்கொண்ட மனிதன், உலகின் ஆகப் பெரும் சல்லிப் பயல்தான்.



விஜய் டிவி ஜுனியர் சூப்பர் சிங்கர் பார்க்கும்பொழுது அம்மா சொன்னது, 'அந்தக் குழந்தையைப் பார்க்கும்பொழுதெல்லாம், அதன் கன்னத்தில் முத்தமிட வேண்டும்போல இருக்கிறது.' எனக்கும் அதுபோல பல சமயங்களில் தோன்றியிருக்கிறது.

ஏதோ ஒரு குழந்தையைப் பார்த்து அப்படி ஏன் தோன்ற வேண்டும்? அதன் கொழுகொழு கன்னங்களாக இருக்கலாம் அல்லது துறுதுறு நடவடிக்கை அல்லது சூது அறியாத பால் முகம் ஏதோ ஒரு காரணம். 'முத்தம் கொடுத்துட்டே இருக்காதடி, நோய்த்தொற்று ஆகி விடப்போகிறது' என்று குழந்தையாக இருந்த அத்தை மகளைக் கொஞ்சும்போதெல்லாம் அத்தை கூறுவார். அதனாலேயே எனக்குக் குழந்தைகள் பிறந்தபொழுது, 'இவன் என்னவன். எவ்வளவு வேண்டுமானாலும் கொஞ்சலாம். யாருமே தடுக்க முடியாது' என்று தோன்றியது. எத்தனை லட்சம் முத்தங்கள் கொடுத்திருப்பேன் என்று தெரியாது.

காதல் அரும்பும் தொடக்கத்தில் தொடுதல் என்று இல்லை, காதலன்ஃகாதலியின் மூச்சுக் காற்று மேலே பட்டாலே, மனது படபடக்கும். காலப்போக்கில், அந்தத் தொடுதலால் மனதில் ஏற்படும் பட்டாம்பூச்சி வேண்டுமானால் காணாமல் போகலாம் ஆனால் ஒரு நீண்ட நெடிய நாளைக் கடந்த பிறகு, துணைவரின் தோள் சாய்வதோ மாடி சாய்வதோ என்றுமே அலுப்பதில்லை. அதீத சந்தோஷமோ துக்கமோ, துணைவரின் அரவணைப்பு இல்லாமல் எப்படி அதைக் கடப்பது! 'இவன் என்னவன்', 'இவள் என்னவள்' என்பதை தாலியோ, மோதிரமோவா உலகிற்கு உணர்த்துகிறது? இணையரின் தோளில் போடும் கையோ, கையுடன் கைகோத்துக் கொள்வதோதானே நான் இவனுக்கானவன் என்பதைப் பறைசாற்றுகிறது. காதலின் பிரிவுகூட கடைசி தொடுதலுடன்தானே நிறைவடைகிறது?

சில மாதங்களுக்கு முன் வெளியான நீயா நானா நிகழ்ச்சியில், பெண் குழந்தைகள், தந்தைகள் பங்கு பெற்ற நிகழ்ச்சியில், அதிக பெண்கள், 'அப்பா என்னைத் தொடுவதை குறைத்துக் கொண்டார்' என்று கூறினார்கள். ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல் அப்பாக்கள் தங்கள் பெண் குழந்தைகளைத் தொடுவதைக் குறைத்துக் கொள்வது யாரும் சொல்லிச் செய்வதில்லை. வயதிற்கு வந்த பெண்ணை அவசியம் இல்லாமல் தொடக்கூடாது என்று நினைக்கும் அப்பாக்கள்தான் தங்கள் மகளுக்கு ஒரு பிரச்னை என்றால் முன் நிற்பார்கள். எப்போதும் தொடும் உரிமை இருக்கும் அம்மாகூட அதற்கடுத்துதான்.

அப்பா இறந்த சமயத்தில் பல விதங்களிலும் ஆறுதல்கள் வந்து கொண்டிருந்தன. நிறைய நிறைய வார்த்தைகள். ஒன்றுகூட நினைவில் இல்லை. ஆனால் ஒன்றுமே பேசாமல், முகம் முழுக்க சோகத்திலும், லேசான கலங்கிய கண்ணீரிலும், அதுவரை என்னைத் தொட்டிராத ஒரு அண்ணன், என் கைகளைப் பிடித்தபடி என்னை பார்த்தது மட்டும் அப்படியே பதிந்துவிட்டது. அந்தத் தொடுதல் ஆறுதலைக் கொடுத்ததா என்று தெரியவில்லை. ஆனால், 'உன் துக்கத்தில் நானும் பங்கு கொள்கிறேன்' என்பதை அதைவிட சிறப்பாக எப்படி கடத்திவிட முடியும்?

கடைசியாக அப்பாவின் கைகளில் வைத்து எடுக்கப்பட்ட சில சில்லறைக் காசுகளை, தங்கத்தைவிட விலைமதிபாக்கியது அந்த கடைசித் தொடுதல் அல்லாமல் வேறு என்ன? மின்தகனம் செய்யும் கடைசி நிமிடத்திற்கு முன் அப்பாவை ஒருமுறை தொட்டுப் பார்க்கவேண்டும் என்று ஏன் தோன்ற வேண்டும்? வார்த்தைகள் கைகூடாத நேரத்தில், தொடுதல்தானே அனைத்தும்!

சமீப காலங்களில் குழந்தைகளுக்கு பாதுகாப்பான தொடுதல், பாதுகாப்பற்ற தொடுதல் (ளயகந வழரஉா, ரளெயகந வழரஉா) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இது மிகவும் முக்கியமானது.

பள்ளிக் காலங்களில் பிடித்த ஆசிரியரைத் தொடுவதெல்லாம் சாத்தியமற்றது. அப்படி ஒரு பழக்கமே கிடையாது. ஆசிரியர் அடிக்க மட்டுமே கைகள் மேலே படும். வகுப்பு நடைபெறும் சமயம், பள்ளி மர இருக்கைகளுக்கு நடுவே நடந்து செல்லும்போது அவர் சேலை நுனியைத் தொடுவதே பேரின்பம் கொடுக்கும். கன்னம் வலிக்கும் அளவிற்கு கிள்ளி முத்தம் கொடுக்கும்பொழுது அந்த வலியை தாண்டி அதில் இருக்கும் அன்பை மட்டுமே உணர்த்திய தொடுதல் அது.

மருத்துவ காரணங்களுக்காகத் தொடும்பொழுது அதில் எந்த வித உணர்ச்சியுமே கடத்தப்பட்டதில்லை. அவர்களுக்கு அது வெறும் உடல்தான். எதை சோதிக்க மேலே கை வைக்கிறார்களோ, அதில் மட்டுமே அவர்களின் கவனம் இருப்பதால், சில இடங்களில் தொடும்பொழுது கொஞ்சம் அசௌகரியம் ஏற்படுகிறதே தவிர, அதைத் தாண்டிய ஒரு உணர்ச்சி இருந்ததில்லை. அது எதிர் பாலினமாக இருக்கும் பொழுதிலும். சம்பந்தப்பட்ட நபர் ஒரு பயிற்சி பெற்ற நிபுணர், அவர் பணியை அவர் செய்கிறார் என்கிற எண்ணம் மட்டுமே மேலோங்கியிருக்கும்.

தொடுதல்கள் ஒன்றும் வார்த்தைகளைப் போல அவ்வளவு குழப்பமானவையில்லை. தொடுதல்களுக்கு மொழிகள் தேவையில்லை. தொடுதல்களுக்குப் பொய் பேசத் தெரிவதில்லை. தொடுதகள் கொடுக்கும் ஆறுதல்களை வார்த்தைகள் கொடுப்பதில்லை. தொடுதல்கள் கொடுக்கும் எச்சரிக்கைகளை வேறு எந்த அறிவுரைகளும் கொடுப்பதில்லை. தொடுதல்கள் கொடுக்கும் காதலை வேறு எந்த பரிசுப் பொருள்களும் கொடுப்பதில்லை.



# இறுதிக்கட்டத்தை எட்டிய போர் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இஸ்ரேல் -ஹமாஸ் ஒப்புதல்: அமெரிக்க அதிபர் டிரம்ப் தகவல்



இஸ்ரேல் காசா போர் தொடங்கி கடந்த செவ்வாய்க்கிழமையுடன் 2 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. இந்த நீடித்த போரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களும், 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி பாலஸ்தீனர்களும் பலியாகி விட்டனர். போரை முடிவுக்கு கொண்டு வர எகிப்து, கத்தார், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தொடர் முயற்சிகளை எடுத்து வந்தன. இதன்ஒரு பகுதியாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த வாரம் 20 அம்ச அமைதி திட்டம் ஒன்றை அறிவித்திருந்தார். இந்நிலையில் இஸ்ரேல் காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தை இருநாடுகளும் ஏற்று கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டிரம்ப் தனது சோஷியல் ட்ரூத் சமூக வலைதளத்தில், "இஸ்ரேலும், ஹமாசும் போர் நிறுத்த அமைதி திட்டத்தின் முதல் கட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதன்படி ஹமாஸ் பிடித்து சென்ற அனைத்து பணய கைதிகளும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்பதே இதன்பொருள். இதேபோல், நீடித்த, வலுவான மற்றும் நிரந்தர அமைதியை உருவாக்க காசாவில் இருந்து இஸ்ரேல் படைகளை திரும்ப பெறும். அனைத்து தரப்பினரும் நியாயமாக நடத்தப்படுவார்கள்" என தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் அறிவிப்புக்கு பிரதமர் மோடி வரவேற்பு தெரிவித்துள்ளார். இதுகுறித்து பிரதமர் மோடி தன் சமூக ஊடகத்தில், "டிரம்ப்பின் முதற்கட்ட அமைதி ஒப்பந்தத்தை வரவேற்கிறோம்" என குறிப்பிட்டுள்ளார். அதை தொடர்ந்து நேற்று இரவு பிரதமர் மோடி அமெரிக்க அதிபர் டிரம்புடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரலாற்று சிறப்புமிக்க காசா அமைதித் திட்டத்தின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தார். இதுகுறித்து பிரதமர் மோடி, 'எனது நண்பர் அதிபர் டிரம்புடன் பேசி வரலாற்றுச் சிறப்புமிக்க காசா அமைதித் திட்டத்தின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தேன். வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் அடைந்துள்ள நல்ல முன்னேற்றத்தையும் மதிப்பாய்வு செய்தேன். மேலும் வரும் வாரங்களில் நெருங்கிய தொடர்பில் இருக்க ஒப்புக்கொண்டேன்' என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வங்கதேச மாஜி பிரதமர் ஷேக் ஹசீனாவை கைது செய்ய உத்தரவு



*வங்கதேசத்தில் அவாமி லீக் கட்சியின் தலைவராக இருந்த பிரதமர் ஷேக் ஹசீனா (72), கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த மாணவர் போராட்டத்தில் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, இந்தியாவுக்கு தப்பி சென்றார்.*

*தற்போது நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு வங்கதேசத்தில் உள்ளது. அங்கு, 2026ம் ஆண்டு பிப்ரவரியில் பொதுத்தேர்தலை நடத்திட தேர்தல் கமிஷன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

*பதவி இழந்து நாட்டைவிட்டு வெளியேறிய ஷேக் ஹசீனா மீது ஏராளமான கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அவர் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் நடைபெற உள்ள பொதுத்தேர்தலில் வாக்களிக்க தடைவிதித்தும், தேசிய அடையாள அட்டை முடக்கி வைத்தும் தேர்தல் கமிஷன் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், ஷேக் ஹசீனாவை கைது செய்ய சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்துள்ளது.*

*அவாமி லீக் ஆட்சி காலத்தில் ஏராளமானோர் காணாமல்போன வழக்கை, நீதிபதி கோலாம்மோர்டுசா மொஜூம்தர் தலைமையிலான 3 உறுப்பினர்கள் கொண்ட சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் விசாரித்தது. இது தொடர்பான வழக்கில் ஷேக் ஹசீனா முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார்.*

*கிட்னி முறைகேடு வழக்கை சிறப்பு புலனாய்வுக்குழு விசாரிக்க எந்த ஆட்சேபனையும் இல்லை : உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தெரிவிப்பு'*

*தற்போது, அவர் வங்கதேசத்தில் இல்லாத நிலையில், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, புலனாய்வு இயக்குநர் அதிகாரிகள் உள்பட 29 பேருக்கு எதிராக கைது வாரன்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*அவர்களை வரும் 22ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்றும் சர்வதேச குற்ற தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.*

*(ஐ)*




தாலிபான் வெளியுறவு அமைச்சர் இந்தியா வந்துள்ள நிலையில், ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் விமானப் படை தாக்குதல் நடத்தியுள்ளது. தலைநகர் காபூலில் உள்ள பாகிஸ்தானிய தாலிபன் **(Tehreek-e-Taliban)** அமைப்பினரை குறிவைத்து தாக்குதல் நடந்துள்ளது. இத்தாக்குதலுக்கு அமெரிக்க ராணுவம் உதவியுள்ளதாகவும் தகவல் தெரிவித்துள்ளது. (ஐ)

## கிரிப்டோ கரன்சிகள் திருட்டில் சாதனை படைக்கும் வடகொரிய ஹேக்கர்கள்




சமீப காலமாக உலகம் முழுதும் கிரிப்டோ கரன்சி எனப்படும் மெய்நிகர் நாணய பயன்பாடு அதிகரித்துள்ளது.

இதில், தற்போது பல மோசடிகளும் நடக்கின்றன. அதாவது, வட கொரியா, இந்த கிரிப்டோ திருட்டில் முதலிடத்தில் உள்ளது தெரியவந்துள்ளது. 'லாசரஸ் குரூப்' என்ற பெயரில் அறியப்படும் இந்த ஹேக்கர்கள், கிரிப்டோ நிறுவனங்களின் வலைதளங்களை ஹேக் செய்து, கரன்சியை திருடி வட கொரியாவின் ஆயுத மற்றும் ஏவுகணை திட்டங்களுக்கு நிதி அளிப்பதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

கடந்த பிப்ரவரியில், துபாயை தளமாக கொண்ட 'பைபிட்' என்ற கிரிப்டோ வர்த்தக நிறுவனத்தின் இணையதளத்தை ஹேக் செய்து ரூ.13 ஆயிரம் கோடியை இந்த லாசர் குழு கொள்ளையடித்துள்ளது. இந்தாண்டில் இதுவரை, 30க்கும் மேற்பட்ட சைபர் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

அவர்கள் திருடிய கிரிப்டோகரன்சியின் மதிப்பு ரூ.16 ஆயிரத்து 800 கோடியாகும். இது கடந்தாண்டை விட 3 மடங்கு அதிகமாகும். திருடப்பட்ட கிரிப்டோகரன்சி, வடகொரியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதம் வரை பங்களிக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த, 2017 முதல் இந்த லாசரஸ் குழு, ரூ.50 ஆயிரம் கோடிக்கும் அதிகமான கிரிப்டோ கரன்சி கொள்ளையில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத தக்கது. (ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பாலித செனவிரட்ன யாழ். தலைமைப் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற பெயர்களை வைத்து இந்தக் கட்சிகள் இலங்கையில் பதிவில் இருக்கக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க பிரேரணை ஒன்றை இன்று கொண்டு வந்திருந்தார்.

இந்தப் பிரேரணைக்கு எதிராக இன்று என்னால் நாடாளுமன்றத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு கடுமையான விவாதங்களுக்கு மத்தியில் அந்தப் பிரேரணை முயற்சி முறியடிக்கப்பட்டது.

இதற்கு எமக்குப் பல கட்சிகளின் ஆதரவு இன்று கிடைக்கப் பெற்றது.

2009 ஆண்டளவில் இதே போன்ற காரணத்தைக் காட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்ற வழக்கு வைக்கப்பட்டது. அதனை எதிர்த்து எமது கட்சியின் மறைந்த முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவினால் இந்த விடயம் கையாளப்பட்டு, இதற்கான வழக்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் அதனை எதிர்த்து வாதிட்டு வெற்றிகரமாக நீதிமன்றத்தில் அந்த முயற்சியை முறியடித்தார்.” - என்று இன்று இந்த விவாதத்தின் பின்னர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

இன்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்குப் பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன,

“இன மற்றும் மத அடையாளங்களைக் கொண்ட அரசியல் கட்சிகளைத் தடை செய்வதற்கான சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கையைத் தடை செய்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் அதைத் திரும்பப் பெற கோரிக்கை விடுத்துள்ளதால், அது வாபஸ் பெறப்பட்டது.” - என்று கூறினார்.

இந்தப் பிரேரணைக்குப் பின்னால் உள்ள தனது ஒரே நோக்கம் நாட்டில் இன மற்றும் மத நல்லிணக்கத்தை உறுதி செய்வதாகும் என்று ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

சிறுபான்மை சமூகங்களுக்கு நீதி கிடைக்கும் வரை அத்தகைய பிரேரணை அல்லது சட்டத்தைச் செயற்படுத்தக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கற்கும் 13 மற்றும் 14 வயதுடைய சிறுவர்கள் இருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பவில்லை என்று கண்டி பொலிஸ் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, சிறுவர்கள் இருவரும் புதன்கிழமை அன்று மகாவலி கங்கைக்குச் செல்வதைக் கண்டதாகப் பிரதேச மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், காணாமல்போன சிறுவர்களில் ஒருவர் மகாவலி கங்கையில் மிதந்த நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்ட நிலையில் மற்றைய சிறுவனின் சடலமும் இன்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர்கள் இருவரும் மகாவலி கங்கையில் விளையாடிக்கொண்டிருக்கும் போது அங்கிருந்த மீனவர் ஒருவர் கங்கையின் நீர் மட்டம் அதிகமாக உள்ளதால் கங்கையில் நீராட வேண்டாம் என எச்சரித்தும், சிறுவர்கள் இருவரும் நீச்சல் தெரியும் எனக் கூறி கங்கையில் தொடர்ந்து நீராடிக்கொண்டிருந்தனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நீச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக, சிறுவன் படித்து வந்த முன்பள்ளி பாடசாலையின் உப அதிபர் உட்பட ஏழு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை மிரிஹான, ஸ்டென்லி மாவத்தையில் உள்ள விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளரின் வழிகாட்டுதலின் கீழ் சிறுவர்கள் நீச்சல் தடாகத்தில் நீந்திக் கொண்டிருந்த போது, சிறுவன் நீரில் மூழ்கியுள்ளார்.

நீச்சல் தடாகத்தில் இருந்து மீட்கப்பட்ட சிறுவன் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிறுவனின் பிரேத பரிசோதனை நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றதோடு, இந்த சம்பவம் தொடர்பாக முன்பள்ளி பாடசாலையின் உப அதிபர் விளையாட்டு ஒருங்கிணைப்பு அதிகாரி, இரண்டு ஆசிரியர்கள், ஆரம்ப பாடசாலையின் ஊழியர் மற்றும் இரண்டு நீச்சல் பயிற்றுனர்கள் உட்பட 7 பேர் மிரிஹான பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## என்.பி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

- பிமல் ரத்நாயக்க - போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்
- அநுர கருணாதிலக - துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்
- வைத்தியர் எச்.எம். சுசில் ரணசிங்க - வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்
- கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ - நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர்
- டி.பி. சரத் - வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர்
- எம்.எம். மொஹம்மட் முனீர் - சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்
- எரங்க குணசேகர - நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்
- வைத்தியர் முதித ஹன்சக விஜயமுனி - சுகாதார பிரதி அமைச்சர்
- அரவிந்த செனரத் விதாரண - காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்
- எச்.எம். தினிது சமன் குமார - இளைஞர் விவகார பிரதி அமைச்சர்
- யூ.டீ. நிஷாந்த ஜயவீர - பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்
- கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன - வெகுஜன ஊடக பிரதி அமைச்சர்
- எம்.ஐ.எம். அர்கம் - வலுசக்தி பிரதி அமைச்சர்



# யானை தாக்கி இருவர் மரணம்!

கொழும்பு, ஒக். 10

வெவ்வேறு இடங்களில் காட்டு யானைகள் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலனறுவை, பக்கமுன, பட்டுஹேன கிராமத்துக்குள் நேற்று நுழைந்த காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பக்கமுன, பட்டுஹேன கிராமத்தைச் சேர்ந்த 62 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தை ஆவார். காட்டு யானை ஒன்று பட்டுஹேன கிராமத்துக்குள் நுழைந்து வீடுகள் மற்றும் பயிர்களைச் சேதப்படுத்திய நிலையில் மேற்படி குடும்பஸ்தரையும் தாக்கியுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. தாக்குதலுக்குள்ளான அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டையில் கிரிந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகெம்முல்ல பிரதேசத்தில் நேற்று காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

இவர் கிரிந்த - ஒருகெம்முல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள தனது தோட்டத்தில் உள்ள பயிர்களை வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காகத் தோட்டத்தில் தங்கியிருந்த போது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

# நாடு பிரிக்கப்பட வேண்டும் என நினைக்கும் தமிழ்ப் பிரிவுகள் வாழும் வரை ராஜபக்சர்களுக்கு துன்பமே – ஞானசார தேரர்!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நலம் விசாரிக்கும் பொருட்டு கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட குழு தங்காலை கார்ல்டன் இல்லத்திற்குச் சென்றனர்.

இந்த சந்திப்பின் பின்னர் ஞானசார தேரர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒருபோதும் மறக்க முடியாத அரச தலைவர்.

நாம் எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்தாலும், எமது வாழ்வில் நாம் கண்ட ஒரு மாவீரர். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நமது முழு இளைஞர்களும் போரினால் பாதிக்கப்பட்டனர்.

போர் மற்றும் மரண பயமாக இருந்த ஒரு காலத்தில் துட்டுகேமுனு மன்னரைப் போன்று நாட்டை மீட்ட ஒரு மாவீரர் ஆவார்.

போர் மனநிலையைக் கொண்டிருந்த மற்றும் நாட்டைப் பிரிக்க முயன்ற சக்திகள், சுமார் 30 ஆண்டுகளாக நாட்டை அச்சுறுத்தி வந்த நிலையில் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நாடு பிரிக்கப்பட வேண்டும் என்று நினைக்கும் சில தமிழ்ப் பிரிவுகள் இந்த உலகில் வாழும் வரை, ராஜபக்சக்கள் துன்பத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்– என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யுத்த காலத்தில் விடுதலை புலிகளால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை தேடி அகழ்வு பணி

திருகோணமலை பிரதேசத்தில் யுத்த காலத்தில் விடுதலை புலிகளினால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை தேடி அகழ்வு பணி இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புடவைக்கட்டு கிராமத்தின் காட்டு பகுதியில் யுத்த காலத்தில் விடுதலை புலிகளினால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் புதைக்கப்பட்டு இருப்பதாக குச்சவெளி பொலிஸ் விசேட பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி குச்சவெளி நீதிமன்றால் விடுக்கப்பட்ட விசேட அனுமதியினூடாக நேற்று குறித்த பகுதியில் அகழ்வு பணி மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் 10 அடி ஆழம் தோண்டுவதற்கே நீதிமன்றால் அனுமதி வழங்கப்பட்டது.

குறித்த பகுதியில் மேற்கொண்ட அகழ்வின் போது ஆயுதப்பொருட்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அகழ்வு பணியின் போது குச்சவெளி பிரதேசசெயலாளர், குச்சவெளி, திருகோணமலை மற்றும் புல்மோட்டை விசேட பொலிஸ் பிரிவினரும், புடவைக்கட்டு செந்தூர் பிரிவு கிராம உத்தியோகத்தர் மற்றும் குச்சவெளி பிரதேச சபை உப தவிசாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டுப் பெண்களிடம் அதிக பணம் பறித்த குற்றச்சாட்டில் இரு முச்சக்கர வண்டி சாரதிகள் கைது!

சுற்றுலாவுக்காக நாட்டிற்கு வந்த இரண்டு வெளிநாட்டுப் பெண்களிடம் இரண்டு முச்சக்கர வண்டி சாரதிகள் பயணத் தொகையை விட அதிகமாக பணம் பறித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இம்புல்கொட மற்றும் வெல்லம்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்த 40 மற்றும் 48 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலாவுக்காக நாட்டுக்கு வந்த பிரேசில் மற்றும் பெல்ஜியப் பெண்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்திற்கும் மேலதிகமாக ரூ. 10,000 மற்றும் ரூ. 30,000 ஐ அறவிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் சுற்றுலாப் பிரிவுக்கு கிடைத்த இரு முறைப்பாடுகளை அடிப்படையாக கொண்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து சந்தேகத்திற்குரிய இரண்டு முச்சக்கர வண்டி சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக கறுவாத்தோட்டம் மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2025 வெளியிடப்பெற்றது.